

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.10.2023) சென்னையில், உடல்நலக்குறைவால் காலமான ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலாளர் முனைவர் பி.செந்தில்குமார், மகன் அஷ்வின் உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் ஆகியோர் உள்ளனர்.

### வட்டு எறிதல் போட்டியில்

# வெண்கலம் வென்ற முத்துராஜாவுக்கு பாராட்டுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலை தளத்தில் வாழ்த்து!

சென்னை, அக்.25-

ஆசிய பாரா விளையாட்டுப் போட்டியில் வட்டு எறிதலில் தமிழ்நாட்டைச் சேர்ந்த முத்துராஜா வெண்கலபதக்கம் வென்றதற்கு பாராட்டுகள் எனவும், அடுத்தடுத்த போட்டிகளில் தங்கம் வெல்ல வாழ்த்துகிறேன் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப்பதிவு வருமாறு:-

**Asian Para Games 2022இல் இந்திய வீரர்கள் தொடர்ந்து பதக்கங்களைக் குவித்து வருவதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.**

**அந்த வரிசையில், வட்டு எறிதல் போட்டியில் வெண்கலம் வென்றுள்ள நம் தமிழ்நாட்டைச் சேர்ந்த முத்துராஜா அவர்களுக்கு எனது பாராட்டுகள். முத்துராஜா மென்மேலும் சாதித்து அடுத்தடுத்த போட்டிகளில் தங்கம் வெல்ல வாழ்த்துகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்தியுள்ளார்.

### குன்றத்தூர் வடக்கு ஒன்றியம்

# கெருகம்பாக்கம் ஊராட்சிக் கழகம் சார்பில் பொதுக்கூட்டம்!

## டி.ஆர்.பாலு எம்.பி. - கோவி.செழியன் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

குன்றத்தூர், அக். 25 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் வடக்கு ஒன்றிய தி.மு.க மற்றும் கெருகம்பாக்கம் ஊராட்சி தி.மு.க சார்பில் இன்று புதன்கிழமை மாலை 5.00 மணியளவில் கெருகம்பாக்கம் கற்பக விநாயகர் கோயில் அருகில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திராவிட முதல்வர் தளபதி ஆட்சியின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம் தலைமையில் நடைபெறும் இப்பொது கூட்டத்திற்கு ஒன்றிய கழக துணை செயலாளர் கி.வசீகரன், கி.சுதாகரன் வரவேற்புரை ஆற்றுகிறார். லைலா தினகரன், வெ.கவிபாரதி, ஏ.ராஜலிங்கம், பெ. முருகன், சி.ரவி, சு.குகன், ஏ.பன்னீர்செ ல்வம், எம்.கே. தியாகு, டி.வீரபத்திரன், எஸ். செங்குட்டுவன், பி.காசி, ஜெபரோஸ்கு கன், எஸ்.கௌசல்யாசதிஷ், என். ஜானகிராமன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

அரசு கொரடா கோ.வி. செழியன், குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை அமைச்சர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ. அன்பரசன் கழகப் பொருளாளர் நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி, கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளனர்.

இதில் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் படப்பை ஆ.மனோகரன், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் சரஸ்வதி மனோகரன், ஒன்றிய குழு துணைத்தலைவர் உமாமகேஸ்வரி வந்தேமாதரம், தலைமை பொதுக்குழு உறுப்பினர் கே.எத்திராஜ், குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் து.சுந்தர், பொன்.ஜீவா, பூங்கொடி அரசு, எஸ். ராஜாதேசிங்கு, எஸ்.சந்தானம்,பா.ராஜேந்திரன், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் தி.க.பாஸ்கரன், டி.எஸ்.எம். ஜெயகரன், ப.குமரவேல், டி.ஆர்.சாரதி பெரியநாயகம், தா.அன்பழகன், தமிழரசிசுரேஷ், சுலைமான் சையத், குன்றத்தூர் வடக்கு ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள் எஸ்.ஜனார்த்தனன், எம்.ஆர்.நவீன்ராஜ், பி.கதிரவன், பா.கு.தமிழ் வாணன், ஆர்.பிரபு, வெ.வசந்தகுமார், ரா.ஹரிபாபு, து.நாராயணன், காமாட்சி பாலு, ஜோஸ்பின் கிளாரா, அமுதா சத்யபிரியா, உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் லோகநாயகி சாமிநாதன், உஷா நந்தினி எத்திராஜ், கே.சுதாகரன், அண்ணமாள் மோகன், ஜெமீலா பாண்டுரங்கன், திவ்யா சத்தியநாதன், பா.சுதாகர், கே.அரசு, எஸ்.பாண்டியன், சாந்தா தேவிசுகுமார், வனிதா ராமகிருஷ்ணன், லைலா தினகரன், து.லோகநாதன், கை. சண்முகசுந்தரம் உள்ளிட்டோர் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

நிறைவாக பி.திலக், செ.இமான் (எ) கௌதம், டி.சதிஷ், கே.அய்யப்பன் ஆகியோர் நன்றியுரையாற்றுகின்றனர்.

எனவே இந்நிகழ்ச்சியில் குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழகத்தை சார்ந்த கழக முன்னோடிகள், கிளைக்கழக செயலாளர்கள், நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம் தனது அறிக்கையில் தெரிவித்து உள்ளார்.

### சாக்கோட்டை ஒன்றியத்தில்

# ரூ. 54 லட்சத்தில் முடிவுற்ற பல்வேறு திட்டப்பணிகள்!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் அர்ப்பணித்தார்!

சிவகங்கை, அக். 25 -

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி சாக்கோட்டை ஒன்றியத்தில் பூலான்பட்டியில் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூபாய் 7.50 லட்சத்தில் கலையரங்கமும், ஆவடைபொய்கையில் ரூபாய் 10 லட்சத்து 93 ஆயிரம் செலவில் கட்டப்பட்ட அங்கன்வாடி மையம் தி.சூரக்குடியில் ரூபாய் 14 லட்சத்து 59 ஆயிரத்தில் புதிதாக கட்டப்பட்ட நியாயவிலை கடை, ரூபாய் 6.லட்சத்து 81 ஆயிரம் மதிப்பில் கட்டப்பட்ட சுகாதார வளாகம் ஆக மொத்தம் ரூபாய் 53 லட்சத்து 91 ஆயிரம் செலவில் கட்டப்பட்ட புதிய ஐந்து முடிவுற்ற திட்டப் பணிகள் முடிவுற்ற திட்ட பணிகள் கிராம மக்களுக்கு அர்ப்பணிப்பு விழா மாவட்ட ஆட்சியர் திரு மதி ஆஷா அஜித் தலைமையில் நடைபெற்றது. தி.சூரக்குடி ஊராட்சி மன்ற தலைவர் ஏ.ஆர். முருகப்பன் வரவேற்றுப் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் 53 லட்சத்து 91 ஆயிரம் மதிப்பிலான திட்டங்களை அர்ப்பணித்து கூட்டுறவு அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் பேசியதாவது. தமிழகம் முழுவதும் தளபதி அவர்கள் முதல்வராக பொறுப்பேற்ற நாள் முதல் கடந்த இரண்டரை ஆண்டுகளாக பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் சிவகங்கை மாவட்டம் அதிகம் கிராமப்புறங்கள் நிறைந்த மாவட்டமாகும். கிராம மக்களின் தேவைகள் நிறைவேற்றும் வகையில் கிராமங்கள் புத்துயிர் பெறும் வகையில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகிறது.. அடிப்படை வசதி கட்டமைப்புகள் கிராமங்களுக்கு அவசியம் ஆகும்.

இதை நிறைவேற்ற வேண்டும் என்று முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார் .

அதன்படி ஒவ்வொரு கிராம பகுதிகளிலும் புதிய அடிப்படை கட்டமைப்பு வசதிகளாக சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, தெரு விளக்குவசதி, கழிவறை சாலை வசதிகள், போன்ற அடிப்படை தேவைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இதுபோல் இப்பகுதியில் பூலான் பட்டியில் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூபாய் 7 லட்சத்து 50ஆயிரத்தில் கலையரங்கமும் ஆவடைபொய்கையில் ரூபாய் 10. லட்சத்து 93ஆயிரத்தில் அங்கன்வாடி மையமும், தி.சூரக்குடியில் ரூபாய் 14,லட்சத்து 59 ஆயிரத்தில் புதிய நியாய விலை கடை, ரூபாய் 6.லட்சத்து 81 ஆயிரத்தில் நவீன சுகாதார வளாகமும் கட்டப்பட்டு இன்று பொது மக்களுக்கு அர்ப்பணிக்கப் படுகிறது.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் ரூபாய் ஆறு லட்சம் கோடிக்கும் மேல் அதிகமான கடன் சுமையில் தமிழகத்தை வைத்து விட்டு சென்றுள்ளனர். இந்த நிதி பற்றாக்குறைகளைபோக்கி முதல்வர் அவர்கள் பொறுப்பு ஏற்ற கடந்த இரண்டரை ஆண்டுகளில் பல்வேறு திட்ட பணிகளை நிறைவேற்றி வருகிறார். கிராம மக்கள் முன்னேற வேண்டும். இதன் மூலம் பொருளாதாரம் மேம்படும் என்ற சிந்தனையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி அதற்கு நிதியும் ஒதுக்கி வருகின்றார். எனவே கிராம மக்கள் அனைவரும் முதல்வரின் திட்டங்களை நன்கு புரிந்து கொண்டு அவருக்கு உங்களது ஆதரவினை தொடர்ந்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் .

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசினார். நிகழ்ச்சியில் திட்ட இயக்குனர் சிவராமன் வாழ்த்திப் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் பள்ளத்தூர் கே. எஸ்.ரவி, பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி ராதிகா , ஒன்றிய ஒன்றிய செயலாளர்கள் கே.ஆர். ஆனந்த் சுப.சின்னத்துரை குன்னக்குடி சுப்பிரமணியன், ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார் உட்பட அரசு அலுவலர்கள், கிராமப்புற பொது மக்கள் கலந்து கொண்டார்கள். தொடர்ந்து சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதியில் வைரவன்பட்டி, எஸ்.புதூர் ஒன்றியம் குளத்துப்பட்டி சிங்கம்புணரி ஒன்றியம் செல்லியம்பட்டி ஆகிய ஊர்களில் ரூபாய் 25 லட்சத்து 43 ஆயிரத்தில் புதிதாக அமைக்கப்பட்ட டிரான்ஸ்பார்மர்கள் மின் மாற்றிகளை மக்களுக்கு அர்ப்பணித்து கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் சிறப்புரை ஆற்றினார். இந்த நிகழ்ச்சியில் கோட்டாட்சியர் எஸ் பால்துரை, மின்வாரிய செயற்பொறியாளர் செல்லத்துரை, ஒன்றிய குழு தலைவர் எஸ். சண்முகவடிவேலு, மாவட்ட கவுன்சிலர் ஏ.டி.என். ரவி செயற்பொறியாளர்கள் ஜான் கென்னடி, ஆர் சாத்தப்பன் , எம் ராஜா, வட்டாட்சியர் சாந்தி ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார், புதூர் கண்ணன் உட்பட அரசு அதிகாரிகள், கிராம மக்கள் கலந்து கொண்டார்கள்.

### தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் வரவேற்பு! பாராட்டு!

# ஆசிரியர் பணி நியமன வயது வரம்பை உயர்த்திய முதல்வருக்கு நன்றி !

## சங்கத் தலைவர் கு. தியாகராஜன் அறிக்கை!

சென்னை அக்: 25

ஆசிரியர் பணி நியமன வயது வரம்பை உயர்த்தி,பல லட்சக்கணக்கான ஆசிரியர் பயிற்சி முடித்து பணி வாய்ப்புக்காக காத்திருக்கிற குடும்பங்களின் வாழ்விலே ஒளி விளக்கேற்றி ஆணையிட்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து,

தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநில தலைவர் கு.தியாகராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

தமிழக பள்ளிக்கல்வித் துறை வரலாற்றில் 57 வயது வரை ஆசிரியர் பணி நியமனங்கள் நடைபெற்று வந்தன. பிற துறைகளைப் போன்று அல்லாமல் ஆசிரியர் பணியை மேற்கொள்பவர்கள் தொடர்ந்து தனியார் பள்ளிகளில் ஆசிரியராக பணியாற்றி வருகின்ற காரணத்தினால் 57 வயது வரை எப்பொழுது வேண்டுமானாலும் அரசு பணியில் ஆசிரியராக சேரலாம். இதனால் கற்பித்தல் பணிக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை என்பதை உணர்ந்த,

ஆசிரியர்கள் அரசு ஊழியர்களின் பாதுகாவலர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் 57 வயது வரை ஆசிரியர் பணி நியமனங்கள் நடைபெறலாம் என்று ஆணையிட்டு பொன்னான வாய்ப்பினை ஆசிரியர் பயிற்சி முடித்தவர்களுக்கு வழங்கினார்.

ஆசிரியர் பயிற்சி முடித்து ஆசிரியர் பணி நிய மனத்திற்காக போட்டி தேர்வுகளுக்கு தயாராகிக் கொண்டிருக்கின்ற வேளையில் பலகட்ட முயற்சிகளை மேற்கொண்டு இருக்கும் போது கடந்த ஆட்சி காலத்தில் ஆட்சியாளர்கள் தன்னிச்சையாக ஆசிரியர் பணி நியமன வயது வரம்பை பொது பிரிவினருக்கு 42ஆகவும் இதர பிரிவினருக்கு 47 ஆகவும் குறைத்து அதிர்ச்சி அளித்தனர்.

கடந்த ஆட்சியாளர்கள் ஆசிரியர் பணி நியமன வயது வரம்பை குறைத்ததன் விளைவாக ஆசிரியர் பயிற்சி முடித்தவர்கள் இனி நமக்கு எதிர்காலமே இல்லை என்று கருதி மிகுந்த மன உளைச்சலில் வாழ்க்கை இருண்ட நிலையில் செய்வதறியாது புலம்பி வந்தனர்.

இதனால் அவர்கள் பல கட்ட போராட்டங்களை நடத்த வேண்டிய சூழலுக்கு தள்ளப்பட்டனர். பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகி அவதியுற்று வந்தனர்.

கடந்த ஆட்சிகாலத்தில் TET தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் பல கட்ட போராட்டங்களை நடத்தியும் அன்றைய ஆட்சியாளர்கள் செவி மடுக்கவில்லை.

பல ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்கள் மூடப்படுகின்ற அவலநிலை ஏற்பட்டது

இவர்களின் நியாயமான கோரிக்கையை தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் ஆதரித்து தொடர்ந்து குரல் கொடுத்து வந்தது.

எங்கள் கோரிக்கையின் நியாயத்தன்மையை உணர்ந்து பள்ளி கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டு சென்று இந்த கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றி ஆசிரியர் பணியில் சேர்ந்திட பணி நியமன வயது வரம்பை பொது பிரிவினருக்கு 42 வயதில் இருந்து 53 வயதாகவும், தாழ்த்தப்பட்ட,மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்ப டுத்தப்பட்ட இதர பிரிவினருக்கு 47 வயதிலிருந்து 58 வயதாகவும் ஆணையிட்டு பல லட்சக்கணக்கான ஆசிரியர் பயிற்சி முடித்து பணி வாய்ப்புக்காக காத்திருக்கின்ற குடும்பங்களின் வாழ்விலே ஒளிவிளக்கேற்றியுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் முயற்சியினை மேற்கொண்ட பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களுக்கும் கல்வித்துறை உயர் அலுவலர்களுக்கும் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

இனிவரும் காலங்களில் ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் நலன் சார்ந்த கோரிக்கைகள் ஆணைகளாக வெளிவரும் என்ற நம்பிக்கையை எங்களுக்கு அளிக்கிறது.

இவ்வாறு கு.தியாகராஜன் தனது அறிக்கையில் நன்றி தெரிவித்துள்ளார்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்கு குடிநீர் வழங்கும் முக்கூடல் அணை நான்கு ஆண்டுகளுக்கு பிறகு முழு கொள்ளளவை எட்டியது. அதனை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் – நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் பார்வையிட்டார்.

### நாகர்கோவில் மாநகராட்சி

# முக்கூடல் அணை முழு கொள்ளளவை எட்டியது!

## மாவட்டச் செயலாளர்- மேயர் ரெ. மகேஷ் பார்வையிட்டார்!

கன்னியாகுமரி, அக்.25-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்கு குடிநீர் வழங்கும் முக்கூடல் அணை நான்கு ஆண்டுகளுக்கு பிறகு முழு கொள்ளளவை 24.10.2023, செவ்வாய்க்கிழமை எட்டி உள்ளது. இதை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் பார்வையிட்டார். இந்த முக்கூடல் அணையில் இருந்து நாகர்கோவில் மாநகராட்சி பகுதி முழுவதும் குடிநீர் வினியோகிக்கப்படுகிறது. கடந்த இரண்டு, மூன்று நாள் பெய்த கனமழையின் காரணமாக அணையின் 25 அடி முழு கொள்ளளவையும் எட்டியுள்ளதால் மாநகரத்தில் குடிநீர் தட்டுப்பாடின்றி விநியோகிக்க முடியும். ஏற்கனவே மைனஸ் டிகிரி அளவில் இந்த அணை இருக்கும்போது புத்தன் அணையில் இருந்து கொண்டுவந்த குடிநீரை வைத்து மக்களுக்கு வினியோகிக்கப் பட்டது. இதனால் தண்ணீர் தட்டுப்பாடு இல்லாமல் இருந்தது. இனி மூன்று நாளைக்கு ஒருமுறை தண்ணீர் வினியோகிக்க முடியும். தற்போது நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில் இல்லங்கள் தோறும் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. இது முறையாக நிறைவு பெற்ற பின்பு தனி நபருக்கு 135 லிட்டர் தண்ணீர் என்ற கணக்கில் தினமும் குடிநீர் வினியோகம் செய்யப்படும். தற்போது அணை முழு கொள்ளவை பெற்று இருப்பது அனைவருக்கும் மகிழ்ச்சியை தருகிறது. 2019 ஆண்டுக்கு பிறகு இப்போதுதான் முழு கொள்ளளவை இந்த அணை பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

உடன் மாநகராட்சி ஆணையாளர் ஆனந்த் மோகன் துணை மேயர் மேரி பிரின்சி லதா, ஜவகர், கேட்சன், பூதலிங்கம்பிள்ளை, சதாசிவன், மதியழகன், பேரூர் செயலாளர் ஆலிவர்தாஸ், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அருண்காந்த் உட்பட கழக நிர்வாகிகள், பொது மக்கள் பலர் பார்வையிட்டனர்.

### ஊரக வளர்ச்சித் துறையின் முதன்மைச் செயலாளர்

# முனைவர் பி.செந்தில்குமார் புதல்வர் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக்.25-

தமிழ்நாடு அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் முதன்மைச் செயலாளர் முனைவர் பி. செந்தில்குமாரின் புதல்வர் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் முதன்மைச் செயலாளர் முனைவர் பி.செந்தில்குமார் அவர்களின் மகன் அஷ்வின் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் மறைவெய்தினார் என்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.**

**இளம் வயது மகனைப் பிரிந்து வாடும் அவருக்கும், அவரது குடும்பத்தினர்க்கும் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



திருக்கோயிலூர் சட்டமன்றத் தொகுதி திருக்கோவிலூர் கிழக்கு ஒன்றியம் குலதீபமங்கலம், விளந்தை, கழுமலம், சொரையப்பட்டு, கொழுந்திராம்பட்டு, அத்திப்பாக்கம், நெடுகம்பட்டு, சடைகட்டி ஆகிய எட்டு ஊராட்சிகளில் உள்ள 19 வாக்குச்சாவடி முகவர்களிடம் (BLA2) உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி ஆலோசனை நடத்தினார். மேலும் எட்டு ஊராட்சிகளில் பொதுமக்களைச் சந்தித்து கோரிக்கைகளை கேட்டறிந்தார். மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதி திராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் மு.தங்கம், மாவட்ட துணைச் செயலாளர், நகர மன்றத் தலைவர் டி. என். முருகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி. செல்வராஜ், நகரச் செயலாளர் கோபி கிருஷ்ணன், நகர மன்ற துணைத் தலைவர் குணா, இளைஞர் அணி பாலமுருகன், வழக்கறிஞர் நிஜாம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.